**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

**ஊடக அறிக்கை**

**இந்திய-இலங்கை வர்த்தக சம்மேளனம் 11ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தை நடத்தியது**
**[தாஜ் சமுத்திரா, கொழும்பு, ஆகஸ்ட் 2, 2019]**

இந்திய-இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் 11ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் கொழும்பு, தாஜ் சமுத்திராவில் நடைபெற்றது. இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திரு. தரண்ஜித் சிங் சந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். பல தொழில் அதிபர்கள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

உயர் ஸ்தானிகர், தனது உரையில் இந்திய-இலங்கை இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் இந்திய-இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பங்களிப்பைப் பாராட்டினார். இந்திய அயலுறவுக் கொள்கையில் மூலாதாரமாக உள்ள “சப்க்க சத், சப்க்க விகஸ் ஓர் சப்க்க விஸ்வாஸ் -Sabka Saath, Sabka Vikas aur Sabka Vishwas” (அனைவருடனும் ஒன்றாக, அனைவரினதும் அபிவிருத்திக்காக மற்றும் அனைவரினதும் நம்பிக்கையுடனும்) என்பது வெறுமனே இந்தியாவிற்காக மட்டுமானதல்ல, அது முழு உலகிற்குமேயான எங்களது ஓர் அணுகுமுறையென்பதுடன், எங்களது அயல்நாடுகளுக்கு மிகவும் முக்கியமானதாக உள்ளது எனக் குறிப்பிட்டார். இந்தியாவிற்கான மிகப் பெரிய வெளிநாட்டு விமான சேவையாக ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் உள்ளதைக் குறிப்பிட்டு; கொழும்புத் துறைமுகத்திற்கு 80% வியாபாரம் இந்தியா சம்பந்தப்பட்ட துறைமுக சரக்குப் பரிமாற்றங்கள் மூலமாக வருகின்றதாயின்; இலங்கைச் சுற்றுலாத்துறைச் சந்தைக்கான மிகப்பெரிய மூலவளமாக இந்தியர்கள் இருப்பார்களாயின், அது வெறுமனே இந்தியாவும் இலங்கையும் அயல்நாடுகள் என்பதினால் மட்டுமல்ல; அது இலங்கை சில துறைகளில் தனக்கான ஒரு இடத்தை செதுக்கி எடுத்துக் கொண்டதினாலாகும், என்று அவர் தெரிவித்தார்.

இந்திய-இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் ரொமேஷ் டேவிட் தனது உரையின் போது, இரண்டு நாடுகளினதும் கைத்தொழில்களிடையேயான வினைத்திறனான ஈடுபாடு பற்றிப் பேசினார். ஜனவரி 2019 இல் மும்பாயில் CII பங்குடமை மாநாட்டிற்கு சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்பட்ட விஜயத்தை நினைவுபடுத்திய அவர், இருதரப்புப் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் இந்திய-இலங்கை சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

*****

கொழும்பு
ஆகஸ்ட் 02, 2019